Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTU
CC NO. **280/2020**
**Depostitions of PW- 1 Witness for**

| | |
|---|---|
| Name | மரியதவமணி |
| Father's name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th day of December 2023.

Signature of Witness.

05.12.2023

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை–**

நான் தற்போது பாட்டக்குளத்தில் குடியிருந்து வருகிறேன். வேலை பார்க்கவில்லை. வீட்டிலிருக்கிறேன். இன்னாசியம்மாள் எனது மனைவி. இன்னாசியம்மாள் இறந்து 2 மாதங்கள் ஆகிவிட்டது. இந்திரா நகரில உள்ள வேளாங்கன்னி கோவில் திருவிழாவிற்கு நானும் எனது மனைவியும் போனோம். கோவிலுக்கு போய் ஜெபம் பண்ணி விட்டு வெளியே வந்தோம். கோவிலில் அன்னதானம் நடந்தது. அந்த கூட்டத்தில் எனது மனைவி சென்று சாப்பாடு வாங்க போனார். அப்போது எனது மனைவி கழுத்தில் அணிந்திருந்த தங்க செயின் 5 1/2 பவுன் எடையுள்ளதை காணவில்லை. மறுநாள் சென்று காவல்

நிலையத்தில் புகார் கொடுத்தோம். காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில் எனது ம னைவி கையெழுத்து போட்டார். புகைப்படத்தில் காட்டப்படும் தங்க செயின் தான் எனது மனைவியுடையது. அதுதான் காணாமல் போனது. பின்னர் போலிஸ் காணாமல் போன தங்க செயினை கண்டுபிடித்து கொடுத்தார்கள். நாங்கள் நீதிமன்றத்தில் மனு செய்து மேற்படி தங்க செயினை திரும்ப பெற்றுக்கொண்டோம். போலிசார் இது சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள். தங்க முறுக்கு செயின் தாலியுடன் கூடியது ஒன்று அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.